सामान्य प्रशासन कार्यालय
GENERAL ADMINISTRATION OFFICE
25 JAN 2023
चेन्नै पत्तन प्राधिकरण
CHENNAI PORT AUTHORITY

Secy

SECRETARY'S OFFICE
No.........
Dt. 25/1
CH P.A

# CHENNAI PORT AUTHORITY

## I & PR DIVISION

**Name of the news papers:** DINAMANI

**Date:** 24.01.23

**Page No.:** 04

**Col. :** 01

# சென்னை துறைமுகத்தில் மத்திய அரசு அதிகாரி ஆய்வு

**திருவொற்றியூர், ஜன.21:** சென்னை, எண்ணூர் காமராஜர் துறைமுகங்களில் மத்திய கப்பல் போக்குவரத்து துறை சிறப்பு அதிகாரி சுதன்ஷ் பந்த் சனிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சக சிறப்பு அதிகாரியாக பணியாற்றி வரும் சுதன்ஷ் பந்த் எதிர்வரும் பிப்.1 முதல் அமைச்சக செயலாளராக பொறுப்பேற்க உள்ளார். இதற்கிடையே சென்னைக்கு சனிக்கிழமை வருகை தந்த அவர் சென்னை, எண்ணூர் காமராஜர் துறைமுகங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை துறைமுக தலைமை அலுவலகம் முன்பு ரூ.13 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய தேசியக் கொடியை பறக்கவிட்டார். ரூ. 53 கோடியில் அமைக்கப்பட உள்ள வாகன நிறுத்த மையம் அமைப்பதற்கான திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

மேலும் துறைமுகத்தில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து துறைமுக தலைவர் சுனில் பாலிவால் மற்றும் உயர் அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.